சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசு உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்குதல் சார்பான முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்ட சீராய்வுக்குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (பக1(1)) துறை

அரசாணை (நிலை) எண்.46

நாள் 19.03.2018.
திருவள்ளுவர் ஆண்டு 2049
ஹேவிளம்பி, பங்குனி 5

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (1டி) எண்.57,பள்ளிக் கல்வித் துறை, நாள் 05.03.2013.
2. அரசு உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்குவதிலுள்ள முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்ட சீராய்வுக்குழு தலைவரின் கடிதம் நாள் 20.05.2014.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின்கடித ந.க.எண்.198/அ1/இ1/2012, நாள் 04.09.2014 மற்றும் 07.12.2015.

****

ஆணை:-

பள்ளிக் கல்வித் துறையில் அரசு உயர்நிலைப் பள்ளி / அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்கு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு / பணியிட மாற்றம் செய்வது மற்றும் அதனைச் சார்ந்த முரண்பாடுகளை களைந்திட உரிய பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட சீராய்வுக் குழு அமைக்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த பள்ளிக் கல்வித் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆசிரியர் சங்கத்தினரின் கீழ்க்கண்ட கோரிக்கைகளை பரிசீலிக்க ஓய்வுபெற்ற பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் திரு. ஆர். கருணாகரன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தும், அக்குழு ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்குவதிலுள்ள முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்ட சீராய்வுக்குழுவின் தலைவர் திரு.ஆர்.கருணாகரன் கீழ்க்கண்ட 14 பரிந்துரைகளுடன் கூடிய விரிவான அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

1. மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நேரிடையாக முதன்மைக் கல்வி அலுவலர் பதவி உயர்வு அளிக்க வேண்டியதில்லை.

DRPGTA

Scanned by CamScanner

2. ஒத்த ஊதியம் பெறுவதால் மாவட்டக் கல்வி அலுவலர் பதவியும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவியும் சமமாகக் கருதி ஒருங்கிணைக்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கவேண்டியதில்லை என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.

3. தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி மற்றும் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி ஆகிய இருவேறு பணித்தொகுதிகளை ஒருவழிப்பாதை பதவி உயர்வின் மூலம் ஒருங்கிணைத்து ஒரே பணிவிதியின் கீழ் கொண்டு வர கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கவேண்டியதில்லை என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.

4. தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி , பள்ளிக் கல்விப் பணியை ஒருங்கிணைத்து பகுதி ஒரு வழிப்பாதை பதவி உயர்வு வழங்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்று அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவியிலிருந்து மாவட்டக் கல்வி அலுவலராகப் பணியிட மாறுதல் பெற்றுச் செல்பவர்களுக்கு, பதவி உயர்வுக்கான 3% ஊதிய உயர்வினை அளிப்பது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை பெற்று பரிசீலிக்கலாம்.

5. மேல்நிலைப் பிரிவுக்கென தனி மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடங்கள் வழங்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்க இயலாது என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.

6. விகிதாச்சார முறையில் மாவட்டக்கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்குவதை நிறுத்தி, மாவட்டக்கல்வி அலுவலர் பணியிடத்திற்கு அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களை நியமனம் செய்யக் கோரும் சங்கத்தின் கோரிக்கையினை, மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்விற்கு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தற்போதைய விகிதாச்சாரத்தையே தொடர்ந்து கடைபிடிக்கலாம் என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.

7. நீதிமன்ற வழக்கின் காரணமாக மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு விகிதாச்சாரம் அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் உண்டான இழப்பை ஈடு செய்ய கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ள பதவி உயர்வுப் பணியிடங்களிலிருந்து வழங்கலாம் என்ற குழுவின் பரிந்துரையினை பள்ளிக் கல்வி இயக்குநரின் குறிப்பின் அடிப்படையில் நிராகரிக்கலாம்.

8. மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வில் 3% பணப்பயன் அளிக்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கை ஏற்கனவே நிராகரிக்கப்பட்டு அரசுக் கடிதம் எண்.27/ப.க1(1)/2014, நாள் 28.12.2015-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், பள்ளிக்கல்வி இயக்குநரிடமிருந்து கருத்துருவை பெற்று இப்பரிந்துரை குறித்து மீள பரிசீலிக்கப்படும்.

9. குறைந்த கல்வித் தகுதியுடைய உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பணியிடத்திலிருந்து பதவி உயர்வு பெற்ற மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஆய்வு செய்யக் கோரும் சங்கத்தினரின் கோரிக்கையின்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

DRPGTA

Scanned by CamScanner

ஒருங்கிணைக்கவும் கூடும் என்பதால் உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் பள்ளிக் கல்வியில் ஒருங்கிணைந்த அலகாகச் செயல்படுவதே ஆரோக்கியமான கல்வி வளர்ச்சியை பள்ளிக் கல்வியில் ஏற்படுத்தும். எனவே, மேல்நிலைக் கல்விக்கென்று தனி இயக்ககம் ஏற்படுத்துவது தேவையற்றது.

11. உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வைப் பெற்ற பின்பு அடுத்த பதவி உயர்வை அதே தொகுதியிலிருந்தே பெறுகின்றனர். அது போன்றே முதுகலைப் பாட/மொழி ஆசிரியராக விருப்பக்கடிதம் அளித்து பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் அடுத்த பதவி உயர்வை மேல்நிலைப்பணித் தொகுதியிலேயே பெறுதல் வேண்டும் என ஆணையிடலாம்.

12. அரசு பள்ளிகளாக நகரவைப் பள்ளிகள் ஈர்க்கப்பட்ட பின்பும் 01.06.1986க்கு முன்னர் நியமனம் பெற்றோர் நகராட்சி பள்ளிகளில் மட்டும் பதவி உயர்வு பெறுவதும் அரசு பள்ளிகளில் மறுப்பதும் இயற்கை நிபதிக்கு முரணானது என்பதால் நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பணிபுரிவோர்க்கும் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

13. மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு பெறுவதற்கு அத்தியாவசியமான துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்பதை கட்டாயப்படுத்தலாம். துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெறாதோரின் பெயரை பதவி உயர்வுக்கு பரிசீலிக்க வேண்டியதில்லை.

14. மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு கல்வி நிர்வாக மேலாண்மைப் பயிற்சி மிகவும் அவசியமாகும். இத்துறை மிகுந்த வளர்ச்சியைப் பெற்றிருந்தும், தோற்றுவிக்கப்பட்டு 180 ஆண்டுகள் ஆகியும், கல்வித்துறை அலுவலர்களுக்கென்று தனித்த பயிற்சி அமைப்பு ஏதும் இல்லை. ஆய்வு அலுவலர்கள், கல்வி நிர்வாகம் (Education Administration), அலுவலக நிர்வாகம் (Office Administration), நிதி நிர்வாகம் (Financial Administration), நீதிமன்ற வழக்குகளைக் கையாளுதல் (Handling Court Cases), ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்தல் போன்றவற்றில் சிறந்த பயிற்சிகள் பெறுவது இன்றியமையாதது. இப்பயிற்சிகளை அனுபவமிக்க நிர்வாக அலுவலர்களைக் கொண்டும் கல்வித்துறையில் அனுபவம் மிக்க உயரதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்ற அதிகாரிகளைக் கொண்டும் தனியானதொரு கல்வி மேலாண்மைப் பயிற்சி அமைப்பை உருவாக்குவது குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்துடன் பெறப்பட்ட சீராய்வுக் குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரை சார்பாக, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பெறப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துக்களின் அடிப்படையில் சீராய்வுக் குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் தனித்தனியே அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனைக்குப்பின் குழுவின் பரிந்துரைகள் சார்பாக கீழ்க்கண்டவாறு முடிவுகள் செய்து அவ்வாறே ஆணை வெளியிடப்படுகிறது:-

1. மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நேரிடையாக முதன்மைக் கல்வி அலுவலர் பதவி உயர்வு அளிக்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கவேண்டியதில்லை என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.

DRPGTA

Scanned by CamScanner

2. ஒத்த ஊதியம் பெறுவதால் மாவட்டக் கல்வி அலுவலர் பதவியும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவியும் சமமாகக் கருதி ஒருங்கிணைக்க முடியாதவை.

3. இருவேறு பணித்தொகுதிகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு வழிப்பாதை பதவி உயர்வு இருபணித் தொகுதிகளையும் சார்ந்த ஆசிரியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எவருக்கும் பாதிப்பு இல்லாமல் இதனை நடைமுறைப்படுத்த இயலாது என்பதால் ஒருவழிப் பாதை பதவி உயர்வு வழங்கக் கோரும் கோரிக்கையை ஏற்க வேண்டியதில்லை.

4. பள்ளி உதவி ஆசிரியர்கள் (பட்டதாரி, முதுகலை ஆசிரியர்) நிலையில் மட்டுமே தனித்தனி பிரிவுகள் இருக்கும். மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவியில் இவ்விரு தொகுதிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு விடும். இதனை நடைமுறைப்படுத்த நீண்ட கால அவகாசம் தேவைப்படும். சுமார் 10 ஆண்டுகள் கூட ஆகும். கால நிர்ணயத்தை அரசு செய்துகொள்ளலாம். தற்போதுள்ள இருபிரிவுத் தலைமை ஆசிரியர்களும், பதவி உயர்வை பாதிப்பில்லாமல் அடைந்த பிறகே செயல்படுத்த இயலும். உடனடித் தீர்வு ஏற்படாது.

5. இரு பணித் தொகுதிகளையும் ஒருங்கிணைப்பதற்கு காலதாமதம் ஆகும் பட்சத்தில் மேல்நிலைப் பிரிவுக்கென தனி மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடங்கள் வழங்க பரிசீலிக்கலாம்.

6. இருவேறு பணித் தொகுதிகளில் இத்தலைமை ஆசிரியர்கள் உள்ளதால் 40:35 விகிதாச்சார முறை வழங்கப்பட்டது சரியானதே. அரசு உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் எண்ணிக்கையில் வளர்ந்த வண்ணம் உள்ளதால் விழுக்காட்டு முறையில் மாற்றம் செய்யப்பட்டதும் ஏற்கக் கூடியதே. இருவேறு பணிவிதித் தொகுப்புகள் தற்போதைக்கு நீடிக்கும் என்ற நிலையில் 40:35 என்ற விகிதாச்சார முறையைத் தொடர்ந்து கடைபிடிக்கலாம்.

7. மாவட்டக்கல்வி அலுவலர் பதவியை அடைவதில் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட குறைவுபட்ட (Short fall) 50 பணியிடங்களைத் திரும்பவும் வழங்குவதன் மூலம் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட இழப்பை சரிசெய்யலாம். இப்பணியிடங்களை உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ள பதவி உயர்வுப் பணியிடங்களிலிருந்து வழங்கலாம்.

8. அதிக பணிச்சுமையுள்ள மாவட்டக் கல்வி அலுவலர் பதவி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுப் பணியிடமாகும். அரசுக் கடித எண்.48211/pay cell, நாள் 09.10.2012ன்படி ஒத்த ஊதியத்தில் பணிபுரிந்தாலும் பதவி உயர்வு பெறும் போது 3% ஊதிய உயர்வு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. கல்வித்துறை இதை அனுமதித்து ஆணை வழங்கலாம்.

9. மாவட்டக்கல்வி அலுவலர் பதவிக்குரிய கல்வித் தகுதியை அனைவருக்கும் சமமானதாக நிர்ணயிக்கலாம்.

10. ஒரு அலகில் தனித்த உயர்நிலைப் பள்ளியும் அடுத்த அலகில் உயர்நிலைப் பிரிவுடன் கூடிய மேல்நிலைப் பிரிவும் இருப்பதால் தனித்தனி இயக்ககம் தோற்றுவிக்கப்படுவது இரட்டை நிர்வாக முறையை உண்டாக்கி பள்ளிக் கல்வியில் குழப்பத்தை ஏற்படுத்தி விடும். பிற்காலத்தில் பகுதி ஒருவழிப்பாதை பதவி உயர்வு மூலம் இருவேறு பிரிவுகளும்

DRPGTA

Scanned by CamScanner

10. மேல்நிலைக் கல்விக்கென்று தனி இயக்ககம் தோற்றுவிக்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கவேண்டியதில்லை என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.

11. குறுக்கு மாற்றம் முறையில் (Cross Promotion) பதவி உயர்வு பெறுவதை தடுக்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்று, அரசுப் பணியாளரின் பணி உரிமை (Service Right) மற்றும் மீள் உரிமை (Lien) தொடர்புடையது என்பதால் The Tamil Nadu Government Servants Conditions of Service Act, 2016-இல் வரையறை செய்யப்பட்டுள்ள சட்டப்பிரிவுகளின் மற்றும் இதர விதிகளின் கீழ் இதனை அரசு பரிசீலிக்கும்.

12. நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களையும் மாவட்டக்கல்வி அலுவலர் பதவி உயர்வுக்கு பரிசீலிக்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்று, பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை பரிசீலிக்கலாம்.

13. துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெறுதலைக் கட்டாயமாக்கக் கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்க வேண்டியதில்லை என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம்.

14. கல்வி நிர்வாக மேலாண்மைப் பயிற்சி அமைப்பை உருவாக்க கோரும் சங்கத்தினரின் கோரிக்கையினை, மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கான பயிற்சி அளிப்பதற்கு தனியாக மேலாண்மை பயிற்சி நிறுவனம் அமைப்பதை காட்டிலும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உரிய பயிற்சியாளர்களை கொண்டு பயிற்சி அளிக்கலாம். எனவே குழுவின் பரிந்துரையினை நிராகரிக்கலாம்.

மேலும் பரிந்துரை எண்.4, 8 மற்றும் 12 சார்பாக எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க உரிய கருத்துருக்களை அரசுக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல்
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மைத் தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

DRPGTA

Scanned by CamScanner